நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2020 ஏப்பிறல் 24 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரை | 2020இன் 03ஆம் இலக்கம்

## உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது

உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்யும் அல்லது பயன்படுத்தும் நோக்கங்களுக்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 1(i) இனைப் பின்வரும் விடயங்கள் பதிலீடு செய்யும்.

   (i) உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியில் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

      (அ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் பதிவுசெய்யப்படாத ஊர்திகள் தொடர்பில்;

அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப் பயண ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| உள்ளூரில் பொருத்தப்பட்ட உந்து ஊர்திகள், கடுவழிப்பயண ஊர்திகள் (எஸ்யூவி) மற்றும் வான்கள் | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 70% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| இலகுபார வண்டிகள் | பீ | 90% | 90% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ மற்றும் பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து ஊர்திகள் வான்கள் மற்றும் கடுவழிப் பயண ஊர்திகள் (எஸ்யூவி) | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ஆ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

**பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்**
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**